Australian Government
Department of Home Affairs

# விமானம் மூலம் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறுதல்

விமானம் மூலம் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற நீங்கள் தயாராகும்போது கீழே உள்ள படிநிலைகளைப் பின்பற்றவும்.

## படிநிலை 1 - உங்கள் பயணத்தைத் திட்டமிடுங்கள்

### முன்னதாகவே திட்டமிடுங்கள்

அவுஸ்திரேலியாவில் இருந்து புறப்படும் பயணிகள் COVID-19 க்கு எதிராக முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொள்ளவும், தடுப்பூசி செலுத்தப்பட்டதற்கான ஆவணங்களுடன் பயணம் செய்யவும் அவுஸ்திரேலிய அரசாங்கம் பரிந்துரைக்கிறது.

நீங்கள் பயணம் செய்கையில் தாமதங்கள் மற்றும் இடையூறுகள் ஏற்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பது குறித்த விஷயங்களை நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

நீங்கள் பயணிக்கும் நாடுகள் மற்றும் பயணம் செய்யவிருக்கும் அனைத்து நாடுகளுக்கும் தற்போதைய பயணம், விசா மற்றும் கோவிட்-19 ஆலோசனைகள் குறித்துப் பார்க்கவும். கோவிட்-19 தடுப்பூசித் தேவைகள் மற்றும் பரிசோதனை உட்பட, ஒவ்வொரு நாட்டில் நுழைவதற்கென வெவ்வேறு தேவைகள் உள்ளன.

விமான நிறுவனங்களும் அவற்றுக்கென்று சில விதிமுறைகளைக் கொண்டிருக்கலாம், அவற்றையும் நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும்.

உங்களுக்குச் சம்பந்தப்பட்டதாக இருந்தால், அவுஸ்திரேலியாவுக்குள் மீண்டும் நுழைய நீங்கள் என்ன செய்ய வேண்டியிருக்கும் என்பதைப் பார்க்கவும்.

## படிநிலை 2 - உங்கள் பயண விருப்பத்தேர்வுகளைச் சரிபார்த்திடுங்கள்

அவுஸ்திரேலியா முழுவதும் உள்ள முக்கிய விமான நிலையங்களில் இருந்து வணிக விமானங்கள் கிடைக்கின்றன.

## படிநிலை 3 - உங்கள் பயணத்தை முன்பதிவு செய்திடுங்கள்

## படிநிலை 4 - பயணத்திற்குத் தயாராகுங்கள்

உங்கள் விமானத்திற்கு நீங்கள் செக்-இன் செய்யும்போது, உங்களுடைய பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி விமான நிறுவன ஊழியர் உங்களிடம் கேட்டுக்கொள்வார்:

- பாஸ்போர்ட்
- அனுமதிச் சீட்டு (boarding pass)

சர்வதேச பயண நோக்கங்களுக்காக முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டது என்ற அவுஸ்திரேலியாவின் வரையறையை நீங்கள் பூர்த்தி செய்திருக்கிறீர்கள் என்பதற்கான ஆதாரத்தை வழங்குமாறும் நீங்கள் கேட்டுக் கொள்ளப்படலாம்.

## படிநிலை 5 - நீங்கள் வெளிநாட்டில் இருக்கும்போது

### சமீபத்திய தகவலைத் தெரிந்துகொள்ளுங்கள்

நீங்கள் அவுஸ்திரேலியாவிற்குள் மீண்டும் நுழைய விரும்பினால், அவுஸ்திரேலியாவிற்குள் நுழைவதற்கான தேவைகளை நீங்கள் தொடர்ந்து சரிபார்க்க வேண்டும். நீங்கள் பயணம் செய்யும்போது அவை மாறுபடலாம்.